


29.07.2024

தலைப்புச் செய்திகள்

1. டெல்லி போட்டித்தேர்வு பயிற்சி மையத்தில் மாணாக்கர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் குறித்து மாநிலங்களவையில் விவாதம் நடைபெறுகிறது.

2. மத்திய அரசின் சீரிய நடவடிக்கைகளால் வேலை வாய்ப்பின்மை 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. ஆவின் நிறுவனத்தின் சார்பில் 43 அரை கோடி ரூபாய் மதிப்பிலான திட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்துள்ளார்.

4. கட்டிட வரைபட ஒப்புதலுக்கான கட்டணத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாநில வீட்டுவசதி துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

5. பாரீஸ் ஒலிம்பிக் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியா இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஜக்தீப்தன்கர்

டெல்லி பயிற்சி நிறுவனத்தில் ரீளுஊ தேர்விற்கு பயிற்சி பெற்று வந்த 3 மாணாக்கர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் குறித்து மாநிலங்களவையில் விவாதம் நடைபெற உள்ளது.

அரசியல் சாசன பிரிவின் விதி 176-ன் கீழ் இதுகுறித்து விவாதிப்பதற்கான அனுமதியை மாநிலங்களவை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் வழங்கியுள்ளார்.

இளைஞர் நலன், நகர்புற கட்டமைப்பு மற்றும் ஆளுமையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய பிரச்சனை இது என்று அவர் குறிப்பிட்டார்.

கல்விக்கான சிறப்பு பயிற்சிகள் தற்போது வணிகமயமாகியுள்ளதாக கவலை தெரிவித்த அவர், செய்திதாள்களின் முதல் 2 பக்கங்களில் பயிற்சி நிறுவனத்தின் விளம்பரங்களே அதிக அளவில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டினார்.

இதனிடையே டெல்லி பயிற்சி அகாடமியில் மாணாக்கர் உயிரிழந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை வேண்டும் என்று மக்களவையில் காங்கிரஸ் மற்றும் பிஜேபி உறுப்பினர்கள் கோரினார்கள்.

இதுகுறித்து விசாரிக்க உள்துறை அமைச்சகத்தின் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று பிஜேபி உறுப்பினர் தெரிவித்தார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர் பேசுகையில் எந்தவித இழப்பீடும் இச்சம்பவத்தை ஈடு செய்ய இயலாது என்றார்.

சமாஜ்வாடி தலைவர் திரு.அகிலேஷ் பேசுகையில் இந்த பயிற்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்த அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மன்சூக் மாண்டவியா

மத்திய அரசின் கொள்கை நடவடிக்கைகளால் நாட்டில் வேலை வாய்ப்பின்மை 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாட்டில் வேலையில்லா பஞ்சம் இல்லை என்று குறிப்பிட்டார்.

வரும் காலங்களில் வேலை வாய்ப்பின்மை 3 சதவிகிதமாக குறையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பிரதமரின் நிதி ஒதுக்கீட்டு திட்டங்களால் 4 கோடிக்கும் அதிகமான இளைஞர்கள் வரும் ஐந்து ஆண்டுகளில் வேலை மற்றும் திறன் வாய்ப்புகளை பெறுவார்கள் என்று குறிப்பிட்டார்.

இந்த திட்டத்திற்காக பட்ஜெட்டில் 2 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2 ஆண்டுகளில் தொழிலாளர் பங்களிப்பு விகிதமும், தொழிலாளர்களின் எண்ணிக்கை விகிதமும் உயர்ந்துள்ளதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான பயணம், தொடர்பான பட்ஜெட்டிற்கு பிந்தைய மாநாட்டில் நாளை உரையாற்றுகிறார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்படும் இந்த மாநாட்டில், வளர்ச்சிக்கான மத்திய அரசின் தொலைநோக்கு திட்டங்கள் மற்றும் தொழில்துறையின் பங்கு குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

தொழில்துறையினர், படைப்பாற்றல் திறனாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவை சார்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த தொழில் கூட்டமைப்பு பிரதிநிதிகளும் காணொலி வாயிலாக இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஜெய்சங்கர்

குவாட் நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு, முன்னேற்றம், வளம், நிலைத்தன்மை போன்றவற்றை முன்னெடுத்துச்செல்ல, ஒத்துழைப்பு மற்றும் நம்பகத்தன்மையின் அவசியத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

டோக்கியோவில் குவாட் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்திற்கு பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, இந்தியாவை உள்ளடக்கிய குவாட் நாடுகளின் வெளியுறவு கொள்கைகள் குறித்து திருப்தி வெளியிட்டார்.

வரும் ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான அட்டவணை தயாரிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

தொலைதொடர்பு தொடங்கி, கடல்வழிதட இணைப்பு, பேரிடர் மீட்பு, சைபர் சுகாதார பாதுகாப்பு, காலநிலை மாற்றம் கட்டமைப்பு, திறன்மேம்பாடு, கடல்சார்

விழிப்புணர்வு, தீவிரவாதத்தை எதிர்கொள்வது உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் செயலாற்றுவது குறித்து விரிவாக ஆராயப்படுவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பூபேந்தர் யாதவ்

புலிகள் பாதுகாப்பில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச புலிகள் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி புதுதில்லியில் 25 ஆவது தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய உயர்நிலைக்கூட்டத்தில் இன்று அவர் உரையாற்றினார்.

"புலிகள் வாழ்விடத்தை பாதுகாத்து சர்வதேச அளவிலான கட்டமைப்பு முறையை உருவாக்குவதை கருப்பொருளாக கொண்டு இந்தாண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது."

உலகளாவிய எண்ணிக்கையில் 80 சதவிகித புலிகள் இந்தியாவில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தினத்தை ஒட்டி நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட மசினகுடி பகுதியில் புலிகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

ஆவின் நிறுவனத்தின் சார்பில் 43 கோடியே 63 லட்ச ரூபாய் மதிப்பிலான 4 முடிவுற்ற திட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

இதன்படி கரூர் மாவட்டம் தோரணக்கல் பட்டி, திருவண்ணாமலை மாவட்டம் வேங்கிக்காலில் நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி திறன் கொண்ட பால்பண்ணை,

திருவள்ளூர் மாவட்டம் காக்கலூர் பால்பண்ணையில் நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் லிட்டர் திறன்கொண்ட தயிர் மற்றும் மோர் தயாரிக்கும் ஆலை,

மாதவரத்தில் நோய்க்கிருமிகளைக் கண்டறியும் மேம்படுத்தப்பட்ட ஆய்வகம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவின ஆலைக்கு முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக சென்னை தலைமை செயலகத்தில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் ஊராட்சி மன்ற அலுவலர்கள் பயன்பாட்டிற்காக 391 புதிய வாகனங்களை முதலமைச்சர் இன்று வழங்கினார்.

தொடர்ந்து திருச்சி மாவட்டம் வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே நீர்நிலைகளையும், சாலைகளையும் சீரமைக்க மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் நகர்புறங்களில் நடைபெறும் குடிநீர் திட்ட பணிகள், பாதாள சாக்கடை பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

திடக்கழிவு மேலாண்மையை முறையாக மேற்கொள்ள அமைச்சர் அறிவுறுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ரகுபதி

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணி பாதுகாக்கப்படுவதாக மாநில சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக குறிப்பிட்டார்.

முன்னாள் குற்றவாளிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், காவல்துறை சிறப்பாக செயல்படுவதால் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் கூறினார்.

சட்டம் ஒழுங்கு தொடர்பாக தவறான தகவல்களை எதிர்கட்சிகள் பரப்பிவருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முத்துசாமி

தமிழ்நாட்டில், இணையதள கட்டிட அனுமதி பெறுவதற்கான ஒப்புதல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கட்டிட வரைபட ஒப்புதல் வழங்குவதன் கீழ், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சேகர்பாபு

திருத்தணி முருகன் திருக்கோவில் வளர்ச்சி திட்ட பணிகள் 120 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்று வருவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் வனத்துறை அனுமதி பெற்று யானை வளர்ப்பவர்கள் அதனை வழங்கினால் இக்கோவிலில் யானை வளர்க்கப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

உச்சநீதிமன்றம்

உச்சநீதிமன்றத்தின் 75ஆவது ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி இன்றுமுதல் வரும் 3ஆம் தேதிவரை மக்கள் நீதிமன்றம் எனப்படும் லோக் அதாலத் நடைபெறுகிறது.

நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காண்பதே இதன் முக்கிய நோக்கம் என்று உச்சநீதிமன்ற நீதிபதி கே.வி.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பெரியகருப்பன்

தமிழகத்தில் பொதுமக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அரசு பள்ளி மாணாக்கருக்கு சீருடைகள் வழங்கும் விழாவில் பங்கேற்று பேசிய அவர் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

கர்நாடக மாநில அணைகளிலிருந்து காவிரியில் பெருமளவு தண்ணீர் திறந்துவிடப்படுவதால் மேட்டூர் அணையிலிருந்து விடுவிக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று நண்பகல் 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே திருச்சி மண்டல தலைமை பொறியாளர் திரு.தயாள குமார் மேட்டூர் அணையின் உபரிநீர் போக்கியான 16 கண் பாலம் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு முன்னேற்பாட்டு பணிகளை பார்வையிட்டார்.

இந்நிலையில் காவிரி பாயும் நதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து அதிகரித்து வந்த நீர்வரத்து இன்று சற்று குறைந்துள்ளது.

நண்பகல் நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 90 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

நாமக்கல் மாவட்ட கரையோர பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர்

வாய்ஸ்

குற்றால அருவிகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அருவிகளில் குளிக்க 2ஆவது நாளாக இன்றும் தடை நீடிக்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பாரீஸ் ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு பிரிவில் மனு பாக்கர், சரப் ஜோத் சிங் இணை வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் இன்று கொரிய இணையை எதிர்கொள்கிறது.

பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக், சிராஜ் இணை இன்று பங்கேற்பதாக இருந்த ஆட்டம் ரத்து செய்யப்பட்டதை அடுத்து நாளை இந்த இணை இந்தோனேசிய இணையுடன் மோதுகிறது.

ஹாக்கி போட்டியில் இந்தியா - அர்ஜென்டினாவை இன்று எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு